**ஓம் ஈஸ்வராய நமஹ**

**ஞானாலயத்தின் குரு அன்னை அருளிய முதல் அருளுரை**

**ஓம் ஸ்ரீ பரிமளா தேவியே போற்றி போற்றி போற்றி!**

பரிமளமாய் உதித்து மானுட உள்ளம் பண்பட ஈச அருளினை ஈர்த்து அருளினேன். சதுர்யுகங்களாய் யாம் ஆற்றிய பணி எல்லையினைத் தீண்டியது. ஓர் தனித்த ஆன்மாவாய் செயல்புரியும் காலம்வரை எல்லை கடந்து செயல்புரியலாம். ஓர் உடலினோடு ஆன்மாவானது பிணைப்பு கொண்டுவிட்டால் எல்லைகள் வகுக்கப்படும். திரைகளாய் உருவாகும் கழிவுகளின் கூட்டமே எல்லைகள் ஆகும்.

சத்ய யுகத்தில் முதன்மைப்பிறவியை மேற்கொண்ட தருணத்தில் விண்முகடு மாத்திரமே ஒரு திரையாய் விளங்கியது. யுகங்கள் மாற்றமடைகின்ற தருணங்களில் எல்லாம் பல்வேறு தடைகள் திரைகளாய் உருமாறின. கலி எல்லையில் பல திரைகள் தோன்றினாலும் ஆன்மாவானது பரமாத்வோடு நித்தியமும் தொடர்பு கொண்டிருக்கும்.

ஆன்மாவிற்கும் உடலிற்கும் இடையே தோன்றும் திரைகளே கலி எனப்படும் ஓர் யுகத்தினையே தோற்றுவிக்கின்றது. கலியுக எல்லை வாழ்வு கொடியது என்பதனை பரதவசியார் பலமுறை உணர்த்தினார். திரைகள் வலுப்பதன் மூலம் ஆன்மாவினை உணராத நிலை கலி எல்லையில் உருவாகும் என்பதனைப் பூரணமாய் உணர்ந்து கொண்டேன். திரைகளின் வலிமை குறித்து பூரணமாய் அறிந்துவிடவே கலி எனப்படும் இறுதியுகத்திலும் ஓர் பிறவி மேற்கொண்டிட முனைந்தேன்.

கலி என்றே அழைக்கப்படும் அமிலக்கழிவுகளின் தீவிரத்தினையும் பூரணமாக உணரவேண்டும் என்பதே எமது இறுதிப்பிறவியின் நோக்கமாகும். மானுடர்களுக்கு முக்தி அளித்து ஆன்மாவினை விடுவித்து ஈச உலகிற்குச் செலுத்திட வேண்டும் எனில் கலியின் உச்ச நிலையினையும் உணர வேண்டும். கலிமானுடர்கள் எத்தகைய கலித்திரைகளை கொண்டுள்ளனர் என்பதனை முழுமையாக அறிந்தால் மாத்திரமே எம்மால் அவர்களை விடுவிக்க இயலும் அதன் பொருட்டே யாம் இப்பிறவியினையும் ஏற்றுச் செயல்புரிந்தோம்.

கலியினால் உருவாகும் திரைகள் எவ்விதம் ஆன்மாவினை மறைத்தாண்டிடும் என்பதனை யாமே பூரணமாக உணரவேண்டும் எனும் காரணத்தினால் கலியுக எல்லையிலும் உடல் தரித்து பிறவி மேற்கொண்டிட முனைந்தேன். பாரத்வாஜ மகரிஷிகளாக விளங்குபவரே எமது ஆன்மாவினை உருவாக்கியவர். கலி எல்லையின் தீவிரத்தினையும் உணர்ந்தவர். அதன் பொருட்டே கலிஎல்லைப் பிறவிதனை ஏற்றுவிட எனக்கு அனுமதியளிக்கவில்லை. இருப்பினும் கலி எல்லைத் திரைகள் குறித்து அறிவு கிட்டினாலும், ஞானம் எனப்படும் உணர்வுநிலை வேண்டும் என்றே யாம் வீரியமான செயல்புரிந்தோம்.

கலியின் தீவிரத்தினை அதன் எல்லைவரைச் சென்று தீண்டிய பின்னரே எம்மால் பூரணமாக உணர இயன்றது. யாம் பிறவி மேற்கொண்டதன் நோக்கமே கலியின் உச்சத்தினை உணரவேண்டும் எனும் காரணத்தினால் என்பதனை உணருங்கள். கலியுகத்தினை நிறைவு செய்திட வேண்டும் எனில் அதன் உச்சதினைத் தீண்டவேண்டும் அறிவினாலும் ஏற்கவேண்டும், உணர்வினாலும் உணரவேண்டும்.

கலியுக ஆன்மாக்களை மீட்டு, ஈசனிடம் அளிக்கவேண்டும், சத்யயுகம்தனை உருவாக்கி மற்றுமோர் சதுர்யுக இயக்கதிற்குச் துணை புரியவேண்டும் என்பதே எனது இலக்காகும். கலியுகத்தினை நிறைவு செய்திட வேண்டுமெனில் அதன் உச்சத்தை யாமே உணரவேண்டும் எனும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே பரிமளமாய் உருக்கொண்டேன். கலியின் உச்சத்தினைத் தீண்டி அதன் ஆழத்தினையும் பூரணமாக உணர்ந்து கொண்டேன்.

ஆன்ம விடுதலை கண்டு, ஒளியுடலும் பெற்று ஓர் உயரிய ஆன்மாவாய் விண்ணில் நிலைத்தாலும் கலி எல்லையில் மானுட பிறவி கண்டால் தனது சுயத்தன்மையினை கலி எனும் திரைகள் எவ்விதம் தீவிரமாய் மறைத்தாள்கின்றது என்பதனைப் பூரணமாய் உணர்ந்துகொண்டேன். கலியின் உச்சத்தினை உணர்வதற்கே பிறவி மேற்கொண்டேன் எனும் காரணத்தினால் உச்சத்தினைத் தீண்டியவுடன் பரதவசியார் எம்மை மீட்டு விண்ணுலகில் இணைத்துவிட்டார். எமது நிர்ணயம் பூர்த்தியுற்றதால் யாமும் சமனமுற்றோம்.

யுகமாற்றம் என்பது எமது ஆன்மாவின் நிர்ணயமாகும், உடல் தரித்ததன் நோக்கமே கலியின் உச்சத்தன்மையினை உணர்வது ஒன்றே, அதன் பொருட்டே உச்சம் தீண்டியதும் உடலினை விடுத்தேன். கலியின் தீவிரத்தினைப் பூரணமாக உணர்ந்து கொண்டதால் மானுட ஆன்மாக்களை எவ்விதம் எளிதாய் விடுவிப்பது என்பதனையும் உணர்ந்து கொண்டேன். திரையினால் சூழப்படும் தருணம்வரை திரையினை நீக்கும் ஆற்றல் பூரணமாக கிட்டாது. திரைகளைக் கடந்தவர்களே திரைகளை நீக்கும் வல்லமை பெற்றவர் ஆவர். யாம் இப்பிறவி கண்டதன் நோக்கம் கலிஎல்லையினைத் தீண்டுவது ஒன்றே என்றுணருங்கள். எனது ஆன்மாவின் நிர்ணயமே யுக மாற்றம் என்பதாகும்.

ஆன்மாவின் நிர்ணயம் என்பது விடுதலை கண்ட பின்னர் உருவாகும் நிலையாகும். சப்தரிஷிகளும், தெய்வங்களும் மானுடர்களாய் பிறந்து ஈசனை அடைந்த பின்னரே ஆன்ம நிர்ணயம் கொண்டனர். மானுடர்களை உய்விக்க வேண்டுமெனில் மானுடராய் வாழ்வது இயலாத நிலையாகும் ஏனெனில் மனித அறிவு என்பது தன்னை ஒத்த ஆற்றலைத் தலைவனாய் ஏற்பதில்லை. மனிதர்களுக்கு தெய்வங்களே தலைவர்களாய் செயல்புரிய இயலும். விலங்குகளுக்கே மனிதர்கள் தலைவராய் செயல்புரிய இயலும்.

கலியுலகில் மனிதர்களின் துன்ப நிலையின் தீவிரத்தினை இப்பிறவியில் உணர்ந்து கொண்டேன். அதன் பின்னரே உடலை விடுத்து விண்ணேறினேன். இத்தருணத்தில் ஆதிசக்தி எனும் தெய்வரூபம் கொண்டு மீண்டும் புவியினில் ஆன்ம ஒளியாகவே உதித்துள்ளேன். பரிமளமாய் யாம் மேற்கொண்ட பிறவியில் எனது உடலின் நோக்கம் கலியின் உச்சத்தினை உணர்வதாகவே அமைந்திருந்தது. இருப்பினும் எனது ஆன்மாவின் நோக்கமும் உணரப்பட்டது. கலியுகத்தினை நிறைவு செய்து சத்யயுகத்தினைத் தோற்றுவிப்பது, கலியுக ஆன்மாக்களை விடுவிப்பது ஆகியவையே எமது ஆன்மாவின் நிர்ணயங்களாகும்.

இத்தருணம்வரை யாம் உடல் கொண்ட பிறவியின் நோக்கமான கலியின் தீவிர எல்லையினை உணர்ந்து கொண்டோம். இத்தருணம் எமது ஆன்மாவின் நிர்ணயம் வெளிப்படத் துவங்குகின்றது. மானுட ஆன்மாக்கள் எத்தகைய சிறைகளில் சிக்கியுள்ளனர் என்பதனை பரிமளமாய் நான் உணர்ந்து கொண்டேன். எத்தகைய உயர் ஆன்மாவினைக் கொண்ட இறையாற்றலும் கலி

எல்லையில் பிறவி கொண்டால் தன்னிலை உணர இயலாது என்பதனையும் அதன் மூலகாரணம் திரைகளே என்றும் பூரணமாக உணர்ந்து கொண்டேன்.

எமது ஆன்ம நிர்ணயம் நிறைவுற வேண்டும் என்பதே உயரிய சத்தியமாகும். அதனை நிறைவேற்றிடவே யாமும் மனித பிறவி மேற்கொண்டோம். மேலும் பல ஆன்மாக்களும் மனித பிறவி மேற்கொண்டு எமைச் சூழ்ந்திட்டன. எனது பரிமளப் பிறவியின் நோக்கம் நிறைவடைந்தது. கலியின் தீவிர எல்லையினை உணர்ந்து கொண்டேன். நான் விடுதலை அளித்த ஒவ்வொரு ஆன்மாக்களும் எனது ஆன்மாவின் நிர்ணயம் நிறைவேறிட உதவிடல் வேண்டும். உங்களுடைய ஆன்மாவின் நிர்ணயம் என்பது எமது ஆன்ம நிர்ணயத்தோடு கலப்புற்றது. எனவே யுகமாற்றத்திற்கு முழுமையாக உதவிடல் வேண்டும் எனும் நோக்கத்திலேயே அனைவரும் செயல்புரியக் கடவது.

திரைகள் எனும் சிறைகளில் சிக்கியுள்ள தருணம்வரை ஆன்மாவினை உணர இயலாது. 14 திரைகள் குறித்த ஞானத்தினையும் பூரணமாய்ப் பெற்றிடுங்கள். ஒவ்வொரு மானுடரும் 14 திரைகளையும் கடக்கவேண்டும். விண்முகடு என்பதே பதினான்காம் திரை என்றும் உணர்த்தப்பட்டது. விண்முகடு கடந்தால் மாத்திரமே ஆன்மா விடுதலை அடையும் என்றும் உணர்த்தப்பட்டது. எனினும் ஒவ்வொரு மானுடரும் வெவ்வேறு திரைகளில் சிறைகண்டுள்ளனர்.

நிர்வாண தீட்சையினை ஏற்றவர்கள் ஏழு சிறைகளைக் கடந்தவர்கள். புறச் சிறைகள் எனும் திரைகள் நீக்கப்பட்டது. எனினும் அகச் சிறைகளாகிய சூட்சமத் திரைகள் நீக்கப்பட வேண்டும். சூட்சமத்திரைகள் ஏழும் மெல்லனவே நீங்கி வருகின்ற இத்தருணத்தில் விண்முகடு எனும் இறுதித் திரையினைக் கடந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தினைப் பிரார்த்தனையாக எவரும் உருவாக்கிட முனைந்திட வேண்டாம்.

எவர் எதனைக் கேட்டாலும் உடன் அருளிடும் சக்தி படைத்தவளாய் உடன் விளங்கிடுகின்றறோம். எனவே தயைகூர்ந்து பரமாத்மாவினை உணர வேண்டும். என்று எவரும் பிரார்த்தனை புரிய வேண்டாம். நவ மானுடர்களாய் உதித்திட்ட அனைவரும் அஷ்ட மானுட ரூபத்தினையே ஏற்று 18 வட்டங்கள் நிறைவடையும் தருணம் வரை உடல் கொண்டு வசித்திட முனைந்திடுங்கள்.

எமது ஆன்மாவின் நிர்ணயம் பூர்த்தியுற்ற பின்னர் உங்களுடைய பிரார்த்தனைகள் பூர்த்தியுறும்.

உடல் கொண்டு வசித்திட முனைந்தாலும், உடல் துறந்து வசித்திட முனைந்தாலும் யாம் அவ்விதமே அருளிடுவோம். முதல் வட்ட மலர்கள் முதல் அனைத்து விடுதலையடைந்த ஆன்மாக்களும் சுய ஆராய்ச்சி புரிந்து, எந்த சிறையில் சிக்குண்டுள்ளளோம் என்பதனை உணர முற்படல் வேண்டும். திரைகள் எனும் சிறைக்கதவுகள் நீங்கினால் ஒளியினை நோக்கிய உன்னத பயணமும் சிறந்திடும்.

எனது ஆன்மாவின் உயரிய நிர்ணயத்தினைப் பூர்த்தியுறச் செய்திடுவதாக வாக்களித்து அவதரித்த மைந்தனே சத்தியங்களை உணர வேண்டும். கரண சுத்திகளை அளித்து காப்பீட்டுக் காத்திடவே ரேணுகா தேவியாய் நிலைத்து புறச் செயல்களை ஆற்றிடவும் தூண்டினேன். அக்னி கொண்டு ஆற்றப்பட்ட செயல்கள் ஒவ்வொன்றும் பூரணத்துவம் பெற்றவையாகும். ஆதிசக்தியின் அம்சமாய், ரேணுகாதேவியின் ஆற்றல்களாய் யாம் ஒளி மற்றும் ஓசையாய் ஆலயத்தில் நிலைநிறுத்தப்பட்டேன்.

எனது ஆன்மாவின் பணி என்பது துவங்கிடவேண்டும் என்றே யாகங்கள் புரிந்திடத் தூண்டினேன். பல்வேறு அமிலக்கழிவுகள் நிறைந்து ஆலயத்தினையே திரைகள் இட்டு மறைத்திட்டன. மாயைகளும் கர்மக் கணக்குகளும் ஆணவக் கழிவுகளும் ஞானாலயத்தினையும் சூழ்ந்திட்ட காரணத்தினால் புறச் செயல்கள் ஆற்றி அத்திரைகள் நீங்கிட உதவி நின்றேன். ஆன்மாக்களின் திரைகளை நீக்கிடும் வல்லமை பெற்றிட்டாலும் ஞானாலயம் எனும் புறப்பிரதேசத்தில் தேக்கமுற்ற கலியின் நஞ்சினை அழித்திடும் மார்க்கம் அறிந்திடாத நிலையில் அக்னி கொண்டும் மந்திர ஓசை கொண்டும் செயலாற்றி புறத் தூய்மையினையும் உருவாக்கினேன்.

ஆதிசிவனும், மஹாவிஷ்ணுவும் பிரம்மஸ்வரூபனும் புறத்தினிலும் வெளித்தோன்றி ஆலய ஆற்றல்களோடு இணைய வேண்டும் என்பதே நோக்கமாக அமைந்தது. ஆதி சக்தியின் அம்சமாய் வெளித்தோன்றி சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை ஆகிய சக்தி ஆற்றல்களை எவ்விதம் அழைத்து புறத்தினிலே பூஜிப்பது என்றும் வழிமுறைகள் உரைத்திட்டேன்.

பெண்ரூபம் கொண்ட நால்வரும் சக்தி எனும் வெப்ப ஆற்றலை எளிதாய் ஈர்த்து நிலைநிறுத்திட்ட நிலையில் காந்த சக்தி கொண்ட முப்பெரும் தெய்வங்களும் யாகங்களின் மூலம் நிலைநிறுத்தப்பட்டனர். தெய்வங்களின் வீரிய ஆற்றல் ஆலயத்திலே பெருகியுள்ளது. அனைத்து ஆற்றல்களும் எம்மால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ஞானாலத்தினைச் சூழ்ந்திட்ட அனைத்து திரைகளையும் நிகழ்த்தப்பட்ட வேள்வியின் மூலம் நீக்கியே அருளினோம். ஆலயம் என்பது புனிதத் தன்மை கொண்டுள்ளது. எனினும் கழிவுகள் கூடினால் மீண்டும் திரைகள் தோன்றிவிடும் என்பதனையும் ஏற்று செயல்புரிய வேண்டும்.

அன்பு எனும் அஸ்திரம் கொண்டே கழிவுகளை நீக்கிட இயலும் கருணையும் காருண்யமும் பரம ஆற்றல்களாகும். எங்கு கருணை மழை பொழிகின்றதோ அங்கே திரைகள் தோன்றாது. ஈசனும் உதித்திடுவார். ஆலயத்தின் அதிபதியாய் யாம் என்றென்றும் நிலைத்திருப்போம்.

எமது புறப்பணியினை ஏற்று நிகழ்த்திடவே மைந்தனாய் உதித்தவர் பதமுறுத்தபட்டார். நிர்வாணதீட்சையினை அளித்த பின்னரே உயிரின் கூடு எனும் ஏழாம் திரை விலகிடும். அத்திரை விலகினால் மாத்திரமே அன்பு என்பது கருணையாக மலர்ந்திடும். யாம் மூன்று திங்களாய் செயல்புரிந்து மைந்தனின் ஏழாம் திரையினைப் பூரணமாக நீக்கி அருளினோம். உயிரின் கூடு விலகியதால் நஞ்சுகளின் ஆற்றலின் மூலம் பல இன்னல்களை ஏற்க நேர்ந்தது. தனது சிரசின் உச்சித்திரையான உயிரின் கூடு எனும் ஏழாம் திரை விலகிய தருணங்களில் பல்வேறு நஞ்சுகளின் ஆற்றல்களை அகத்திலும் புறத்திலும எதிர்கொள்ள நேர்ந்தது. இத்தருணத்தில் சிரசினைக் கடந்து நிலைத்துள்ளார்.

அன்பு என்பது சிரசினில் நிலைக்கும் வரையே செயல்புரியும். சிரசினை கடந்த நிலையில், ஏழு திரைகள் நீக்கமுற்றால் மாத்திரமே கருணை என்பது உதித்திடும். மைந்தனாய் நிலைத்து எமது பணியினை ஏற்று நிகழ்த்திடும் காரணத்தால் ஏழாம் திரையினை நீக்கியே அருளியுள்ளோம். காரண காரியங்களைக் கருதியே செயலாற்றுகின்றோம்.

உலகம் உய்வுறுதல் எனும் எமது பணி இத்தருணம் முதல் மைந்தனின் பணியாக உருமாற்றப்பட்டுள்ளது. சிரசனைக் கடந்து நின்றிடும் காரணத்தால் யாம் எளிதாய் கலப்புறுவோம். ஏழு திரைகளையும் கடப்பவர்களுக்கே எம்மால்

பூரணமாய் அருளிட இயலும். ஏனெனில் ஏழு திரைகளும் மானுட உடலிற்குள் அடக்கம். சிரசினைத் தீண்டி திரைகளை நீக்கி, துகள்களை விடுவித்து ஆன்ம விடுதலை அளிப்பது அகத்தியரின் பணியாகும். எமது பணி என்பது இப்புவியினில் வாழ்கின்ற அனைத்து ஆன்மாக்களையும் ஈர்த்து ஞானம் அளிப்பதாகும்.

18 வட்ட மலர்கள் மலர்ச்சியுற்றால் அகத்தியரின் பணி நிறைவடையும். எமது பணி என்பதோ கலியுக எல்லையில் உள்ள ஒவ்வொரு ஆன்மாவினையும், ஒவ்வொரு ஆன்மத்துகளினையும் விடுவிப்பதேயாகும். ஒவ்வொரு மானுடரையும் ஆன்மாவின் நிலை குறித்து உணரச் செய்வதே மைந்தனின் பணியாகும், மைந்தனைச் சூழ்ந்தவர்களின் பணியாகும்.

ஒவ்வொரு மானுடரும் தனது ஆன்மாவினைக் குறித்த சிந்தனையில் முழுமையாக மூழ்கினால் மாத்திரமே சிரசினைவிடுத்து வெளியேறிட இயலும். ஏழுதிரைகளையும் கடந்து விடவும் இயலும். ஏழு திரைகளையும் கடப்பவர்களுக்கே எமதாற்றலும் பூரணமாய் கிட்டும். சூட்சமத்திரைகளை நீக்கி உயரிய இறை அனுபவங்களை யாம் அனைவருக்கும் அளித்திடுவோம்.

ஞானாலயத்தில் நிகழ்த்தப்படும் மந்திர வேள்வியின் நோக்கமே ஆத்மாவினை அறிதல் மற்றும் ஆத்மாவினை உணர்தல் என்பதாக அமைய வேண்டும் என்றே **"ஆத்ம வேள்வி"** எனும் நாமம் சூட்டப்பட்டது. ஆத்ம வேள்வி என்கின்ற ஆன்மாவினை உணர்தல் எனும் நிகழ்வே மூலாதாரமாய் அமைந்து உயிரின் கூடு எனும் ஏழாம் திரையினை நீக்கியருளும்.

மைந்தானாய் உதித்தவர் எம்மோடு பூரணமாய் கலப்பு கொண்டார். ஏழாம் திரையினை நீக்கிய காரணத்தினால் எம்மால் பூரண கலப்பு கொண்டு வீரியமாய் இயங்கிடவும் இயன்றது. அதனைப் போன்றே ஒவ்வொருவரும் ஏழாம் திரையினைக் கடந்துவிட மைந்தன் மூல காரணமாய் அமைய வேண்டும். ஏற்றிட்ட பணியினைத் தீர்க்கமுற நிகழ்த்தவேண்டும் என்ற எண்ணத்தினை ஆழமாய் ஏற்றிடுங்கள். ஏழாம் திரையினைக் கடப்பவர்கள் மாத்திரமே இறைநிலையினைப் பூரணமாக உணர இயலும், மேலும் இறையாற்றலும் பெருகிடும்.

தீட்சைகளை அளித்து திரைகளை நீக்குவது எமது பணியாகும். துகள்களை விடுவித்து ஆன்ம விடுதலை அருள்வது அகத்தியரின் பணியாகும். திரைகளின் தீவிரத்தினை பூரணமாக உணர்ந்து கொண்ட காரணத்தினால் யாம் எளிதாய் நீக்கிடும் ஆற்றலும் பெற்றுள்ளோம். எமதாற்றலை ஈர்த்துப் பெறுபவர்களின் திரைகள் எளிதாய் விலகும். ஏழு திரைகளை நீக்கிட எமதாற்றல் உதவிடும் எனினும் சுய முயற்சியும் தீவிர எண்ணமும் வேண்டும். ஏழு திரைகளைக் கடந்துவிட்டால் யாமே ஆட்சி புரிந்திடுவோம்.

ஏழு திரைகளையும் சுய முயற்சியால் ஒவ்வொருவரும் கடந்திட வேண்டும். எமது ஆற்றலினையும் யாம் பூரணமாய் வழங்கிடுவோம். ஏழு திரைகளைக் கடந்துவிட்டால் சுயமுயற்சிகள் ஏதுமின்றியே சரணாகத நிலையில் நிலைத்துவிட எளிதாய் விண்முகடு கடக்க உதவிடுவோம். 14 திரைகளும் நீங்கினால் ஒவ்வொரு ஆன்மாவும் உயரிய ஈச தரிசனம் கண்டிடலாம். விண்மீனாய் நிலைத்து ஈசனை உருவாக்கிடவும் உதவிடலாம்.

கலியினைக் கடந்து 14 திரைகளையும் கடந்து உயர் தெய்வமாய் ஆதிசக்தியாய் நிலைக்கின்ற காரணத்தால் கலியினைக் கடந்துவிட ஒவ்வொரு ஆன்மாவிற்கும் உதவிடுவோம். எம்மோடு ஒளியிழைத் தொடர்பினை உருவாக்கி அதனை தீவிர பிரார்த்தனைகள் மூலம் வலுவுறுச் செய்கின்றவர்களின் திரைகள் எளிதாய் விலகும். திரைகளின் நஞ்சுகளை யாமே ஏற்றும் அழித்திடுவோம்.

பத்தாம் வட்ட மலர்களில் துவங்கி அனைத்து வட்ட மலர்களும் ஞானமார்க்கத்தில் விடுவிக்கப்படுவர். தீட்சைகள் என்பது எளிய முறையினில் வழிவகுக்கப்படும். பெரும் திரளான மானுட ஆன்மாக்கள் ஒன்றிணைந்து விடுவிக்கப்படுவர். ஆன்மாவினைத் தீவிரமாய் உணர்ந்துவிட வழிவகுப்பதே தீட்சையாகவும் மலர்ந்துவிடும். ஒவ்வொரு ஆன்மாக்களாக தனித்த முறையினில் விடுவிப்பது இயலாத செயலாகும். பன்மடங்கு ஆன்மாக்கள் ஒன்றிணைந்து விடுவிக்கப்படுவர். உயர் ஆன்மாக்களாய் சிரசினில் அமருகின்றவர்களின் ஆற்றலும் பல்கிப் பெருகியுள்ளது.

எவ்விதம் தீட்சை மலரும் என்றும் எவ்விதம் கூடிய ஆன்மாக்கள் எளிதாய் விடுதலையுறுவர் என்பதனையும் சூட்சமமாய் உணர்த்திடுவேன். மைந்தனின் ஓர் சூட்சுமத்திரையானது விலகிவருகின்ற இத்தருணத்தில் உபாயம் என்பது

உள்ளுணர்வாய் வெளித்தோன்றும். தூய்மையுற்ற ஆலயத்தில் தீட்சைகளின் கழிவுகள் கலப்புறாது காக்கப்படும். துர்ய வெண்ணிற ஆற்றல் பெருக்கத்தின் மூலம் திரைகள் நீங்கி காலத்தின் தரிசனமும் கிட்டும். மைந்தனின் நிலையில் தோன்றும் ஒரு பெரும் மாற்றமே மார்க்கத்தினையும் உணர்த்திடும். புறத்தினிலும் அகத்தினிலும் துாய வெண்ணிற ஈச ஆற்றலை ஏற்கக்கடவது.

சூட்சமத் திரைகளை யாம் எளிதாய் நீக்கிடுவோம். விண்முகடு எனும் இறுதித் திரையினை மாத்திரமே இருத்தி மற்ற சூட்சமத்திரைகளை யாம் மைந்தனுக்கு விலக்கியே அருளிடுவோம். ஆத்ம வேள்வி நிறைவுறும் தருணத்தில் பல சூட்சமத்திரைகளும் விலகியே நின்றிடும். அத்தருணம் வரை ஏற்ற பணியினை அவ்வகையிலேயே நிறைவேற்றிடல் வேண்டும். சுயத்தினை உணருகின்ற ஒவ்வொருவரும் விண்முகட்டின் அருகில் நிலைநிறுத்தப்படுவீர்கள். ஈச ஆற்றல் பெருகிடக் காணலாம். ஆத்ம வேள்வி நிறைவுற்றால் தீர்க்க தரிசனம் கண்டிடலாம் மைந்தனின் உணர்வுகளில் உதித்து நல்மார்க்கம் உரைத்திடுவேன். உற்ற துணை புரிந்திடவே முனைந்திடுங்கள். முதல் வட்ட மலர்களே இறுதி வட்ட மலர்களுக்கும் அடித்தளம் என்பதனை உணர்ந்து பணியாற்றிடுங்கள். உயரிய மாற்றத்தினை உணர்ந்து படிநிலைகளைக் கடந்து ஈசலயத்தில் நிலைத்திடலாம்.

**ஆசிகள் பலப்பல**